1979 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையிலே 200-க்கும் மேற்பட்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள் தேவைப் படுகிற காரணத்தால் அவர்களைப் பணியில் எடுக்கின்ற எண்ணம் இருக்கிறது. இருக்கின்ற பணியாளர்கள் கையெழுத்துப் போட்டு விட்டு வேலை செய்யாத சூழ்நிலை இல்லை. அதைப்பற்றி ஏதேனும் உறுப்பினர் அவர்கள் குறிப்பு கொடுப்பார்களானால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகள்.

* வினா எண் 74—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள அம்மையப்பன், கொரடாச்சேரி ஒன்றிய மருத்துவ மனைகளை அரசு ஏற்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்கப்படும்?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தாழை மு. கருணாநிதி : ஒரு யூனியனுடைய தலைமையிடத்தில் அதிகமான பொதுமக்கள் வாழ்கிற இடம். இந்த ஒன்றியத்திலே ஒரு அரசு மருத்துவமனையும் இல்லாத காரணத்தால் அங்கே எல். ஐ. எம். டாக்டர்தான் பணியாற்று கிறார். அதனால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இனியாவது அரசு மருத்துவமனையை அமைக் கின்ற உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அங்கிருந்து மக்களால் இது சம்பந்தமாக தங்களுக்கு ஒரு மருத்துவமனை வேண்டுமென்று விண்ணப்பம் தரப்பட்டு அந்த விண்ணப்பம் இப்போது ஆய்வு செய்வதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பப்பட்டு அவரிடமிருந்து வருகின்ற ஆய்வு அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மேலும், 1977–78 ஆம் ஆண்டு அந்தப் பகுதியிலே இருக்கிற 5,6 தரத்தைச் சேர்ந்த பிரிவுகளிலே உள்ள மருத்துவமனைகள் 6-ஐ எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சுமார் 20 இதுபோன்ற ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த

மருத்துவமனைகளை அரசு ஏற்றிருக்கிறது. இது முதல் ரகத்தைச் சேர்ந்த காரணத்தால் உடனடியாக எடுக்கப்பட முடியவில்லை, ஆனாலும் அரசு பரிசீலிக்கும்.

கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 75— திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம் கந்தேகவுண்டன் சாவடியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று துவங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : இல்லை.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்திலே, அரிசிப்பாளையத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த இடத்திற்கும் கந்தேகவுண்டன் சாவடிக்கும் 12 மைல் தூரம் இருக்கிறது. கந்தேகவுண்டன் சாவடியைச் சுற்றி மலைவாழ் மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஒரு ஒன்றியத்திற்கு ஒன்று என்ற வீதத்திலே தொடங்குவதுதான் அரசின் கொள்கையாகும். அந்த வகையில், 374 ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லுகின்ற க.க. சாவடி கிராமம் மதுக்கரை ஒன்றியத்தில் இருக்கிறது. இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் 3,140. ஆகவே, அரிசிப்பாளையத்திலே இருக்கின்ற இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் அவர் குறிப்பிடுகின்ற க.க. சாவடிக்கும் 11 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மேலும் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சேர்ந்த ஒரு கிளை நிலையம் இந்த கிராமத்தில் இயங்குகிறது. தற்பொழுது இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவமனை கொடுக்கின்ற திட்டமும் ஆய்வில் இருக்கிறது, எனவே, அவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வழிவகையை அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.